DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

STC.No.240/2024

Deposition of Witness : LW10/PW7

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.வெங்கடேசன், உதவி ஆய்வாளர் (ஓய்வு) | Taluk | |
| Father's Name | தங்கவேல் | Village | |
| Age | 60 | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **18.03.2026.** | | | |

(Accused absent, U/s.317 PFA)

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை:</u>**

**1.** நான் தற்போது கடலூர் துறைமுகம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி புரிந்து கடந்த 31.05.2025 அன்று பணி ஓய்வு பெற்றேன். இவ்வழக்கில் சிறப்பு உதவி ஆய்வாளர் பரமசிவம் புகார் மனு பெற்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, வழக்கு கோப்பினை என் பார்வைக்கு வைத்ததை நான் பார்வையிட்டு, எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, 24.07.2023 அன்று பகல் சுமார் 14.00 மணியளவில் சம்பவயிடம் சென்று, சாட்சிகள் ராஜேந்திரன், திருமுருகன் ஆகியோர்கள் முன்பு சம்பவயிடத்தை பார்வையிட்டு, மாதிரி வரைபடம் வரைந்து, பார்வை மகசர் தயார் செய்து, பார்வை மகசரில் மேற்சொன்ன சாட்சிகளிடம் சாட்சி கையொப்பம் பெற்று, அவர்களை விசாரணை செய்து, தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். **(மேற்படி மாதிரி வரைபடம் அ.சா.ஆ-9 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** மேலும், இவ்வழக்கின் புகார்தாரரான, வடிவேல் என்பவரையும், இவ்வழக்கு விபத்தில் காயம்பட்ட சங்கர் என்பவரையும், கண்ணுற்ற சாட்சிகள் சண்முகம், ராமு ஆகியோர்களையும் கடந்த 24.07.2023 அன்று விசாரணை செய்து, தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன்.

2. மேற்படி சாட்சிகளின் விசாரணையிலிருந்து வழக்கு சம்பவம் உண்மையென தெரியவந்ததில், வழக்கு விபத்தை ஏற்படுத்திய TN 32 N 3555 என்ற பதிவெண் கொண்ட அரசுப் பேருந்தின் ஓட்டுனரான எதிரி தனசேகரனை தேடியதில் மேற்படி எதிரி கடந்த 26.07.2023 அன்று இவ்வழக்கு விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் ஆஜரானவரை பகல் சுமார் 11.30 மணியளவில் காரணம் கூறி, கைது செய்து, திரேக சோதனை செய்து, பாராவசம் ஒப்படைத்து, தக்க இருநபர் ஜாமீனில் நிலையத்திலிருந்து விடுவித்தேன்.

3. வழக்கு விபத்தை ஏற்படுத்திய மேற்சொன்ன எதிரி ஓட்டிச்சென்ற TN 32 N 3555 என்ற பதிவெண் கொண்ட அரசுப் பேருந்தை மோட்டார் வாகன

ஆய்விற்காக வேண்டுகோள் கடிதத்தடன் கடந்த 26.07.2023 அன்றும், மேலும், வழக்கு விபத்திற்குள்ளான காயம்பட்ட சங்கர் என்பவர் ஓட்டிச்சென்ற TN 31 BK 6550 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை கடந்த 31.08.2023 அன்று வேண்டுகோள் கடிதத்தடன் மோட்டார் வாகன ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். மேற்படி 2 வாகனங்களையும் ஆய்வு செய்த, மோட்டார் வாகன ஆய்வாளர் விஜய் என்பவரை கடந்த 31.08.2023 அன்று விசாரணை செய்து அவர் மேற்படி விபத்தானது, மேற்சொன்ன வாகனங்களின் எந்தவித இயந்திர கோளாறினாலும் ஏற்படவில்லை என்று தனித்தனியே வழங்கிய 2 மோட்டார் வாகன ஆய்வறிக்கைகளை பெற்று, வாக்குமூலம் பதிவு செய்தேன். **மேற்படி மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் முறையே அ.சா.ஆ–10 மற்றும் அ.சா.ஆ–11 ஆக குவிமுச பிரிவு 294(3) படி எதிரி தரப்பு ஆட்சேபனையின்றி குறியீடு செய்யப்படுகிறது.**

4. மேலும், இவ்வழக்கு விபத்தில் காயம்பட்ட சங்கருக்கு பண்ருட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளித்த மருத்துவர் சரண்யா என்பவரை கடந்த 31.08.2023 அன்று விசாரணை செய்து, மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று வழங்கிய காயச்சான்றை பெற்று, வாக்குமூலம் பதிவு செய்தேன். **மேற்படி விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ–12 ஆக குவிமுச பிரிவு 294(3) படி எதிரி தரப்பு ஆட்சேபனையின்றி குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி சங்கருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று மருத்துவர் வழங்கிய காயச்சான்றின் அடிப்படையில் வழக்கின் சட்டப்பிரிவுகளை இதச பிரிவுகள் 279, 337 லிருந்து, இதச பிரிவுகள் 279, 338 ஆக பிரிவு மாற்றம் செய்து, கடந்த 31.08.2023 அன்று பிரிவு மாற்றல் அறிக்கை தயார் செய்தேன். **மேற்படிடி பிரிவு மாற்றல் அறிக்கை அ.சா.ஆ–13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. இவ்வழக்கில் புகார் மனு பெற்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் பரமசிவத்தை கடந்த 31.08.2023 அன்று, விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் நான் வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 279, 338–ன் படி, 31.08.2023 அன்று இறுதி அறிக்கை தயார் செய்து, சமூகம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

இந்த வழக்கில் நான்தான் விசாரணை அதிகாரி என்றாலும், இவ்வழக்கு சம்பவ இடத்தை பார்வையிட்டு, மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் நான்தான் தயார் செய்துள்ளேன் என்றாலும் சரிதான். சம்பவ இடம் ரோட்டிற்கு இடப்புறம் உள்ளது என்றால் சரிதான். பொதுவாக சாலையில் செல்கின்ற வாகனங்கள் இடதுபுறமாக செல்ல வேண்டும் என்றால் சரிதான். ஆஜரில்லா எதிரியும் வழக்கு சம்பவம் நடந்த சாலையில் அவர் ஓட்டிச்சென்ற பேருந்தினை இடதுபுறமாக தான் ஓட்டிச்சென்றுள்ளார் என்றாலும், இவ்வழக்கு விபத்தில்

அடிப்பட்டதாக சொல்லப்படும் சங்கர் என்பவரின் தவறினால்தான், இவ்வழக்கு விபத்து ஏற்பட்டது என்றாலும், ஆனால், ஆஜரில்லா எதிரியை இவ்வழக்கில் குற்றவாளி எனக்கூறி அவர் மீது குற்றம் சுமத்தி இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளது தவறு என்றாலும் சரியல்ல. இவ்வழக்கு விபத்து நடந்த இடத்தை சுற்றியுள்ள குடியிருப்புகளில் உள்ளவர்களை சாட்சியாக விசாரித்துள்ளேனா என்றால் விசாரிக்கவில்லை. ஆஜரில்லா எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**